# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 227/2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : கமல் ஆனந்த் |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of **24th day of November, 2025.**

(A 1-3 present. )

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது பட்டாபிராமில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் ஐயப்பன்தாங்கல் நம்பர்.243, ஈவிபி பார்க் அவென்யூவில் நான் வாடகைக்கு 3 வருடங்களுக்கு

மேல் குடியிருந்து வந்தேன். அது பழைய வீடு என்பதால் மழைக்கு தண்ணீர் ஒழுகிவந்திருந்து வந்தது அதை சரிசெய்ய ஓனரிடம் கூறினேன். 6, 7 மாதங்களாக சரிசெய்து தரவில்லை. பின்னர் வீடு காலி செய்து தரசொல்ல கூறினார். 19.10.2022 அன்று காலை வீட்டு சாவியை கொடுக்க ஹவுஸ் ஓனர் கோபிநாத் கூறினார். நான் காலையில் இப்போது தான் தூங்கி எழுந்து உள்ளேன். மாலை 4.00 மணிக்கு வந்து சாவியை வாங்கிகொள்ளுங்கள் என்று கூறினேன். அதெல்லாம் முடியாது இப்பவே சாவியை தரவேண்டும் என்று கூறினார். பேசிக்கொண்டிருந்தபோது ஹவுஸ் ஓனர் உடன் ஓய்வு பெற்ற உதவி ஆய்வாளர் சுகுமார் வீட்டிற்கு வந்து சுகுமார் என் கழுத்தை பிடித்து லாக் செய்து விட்டார். ஹவுஸ் ஓனர் கோபிநாத் மற்றும் அவருடன் வந்த சந்திரசேகர் வந்து வீட்டிலுள்ள பொருட்களை எடுத்து ரோட்டில் போட்டார்கள். கெட்ட வார்த்தைகளால் திட்டி, நீ என்ன பெரிய மயிராடா என்று சந்திரசேகர் என் வீட்டிலுள்ள பைப்பை எடுத்து என்னை அடித்தார்கள். என்னை 2, 3 மணி நேரம் நிற்க வைத்து வீட்டிலுள்ள அனைத்து ஜாமான்களை எடுத்து வெளியே போட்டு விட்டார்கள். என்னுடைய மொபைல் போன், லேப்டாப், 43 இன்ஞ்ச் எல்இடி டீவி உடைந்துவிட்டது. கட்டில் மற்றும் அனைத்து சாமான்களையும் எடுத்து ரோட்டில் போட்டுவிட்டார்கள். பின்பு வீட்டை பூட்டி விட்டார்கள். பூட்டை உடைத்து உள்ளே சென்றால் கஞ்சா கேசில் உன்னை உள்ளே தள்ளிவிடுவேன் என்று ஓய்வு பெற்ற எஸ்ஐ சுகுமார் என்னை மிரட்டினார். பின்னர் காவல் நிலையத்தில் அன்றே புகார் கொடுத்தேன். எஸ்ஐ என்னை விசாரித்தார். காண்பிக்கப்பட்ட புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள். ஏசி என்னை விசாரித்தார்.

**1–3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் வாடகை இருந்த உரிமை வீட்டாளருக்கு வாடகை கொடுத்த விவரங்களை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். ரூ.9000/– முதல் ரூ.10000/– வரை வாடகை கொடுத்தேன். நான் அவ்வாறு எந்த ஆதாரமும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால்

போலீசார் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல நான் கொடுத்தேன் வாடகைக்கு உரிமையாளர் ரசீது கொடுக்க மாட்டார். உரிமையாளர் ரசீது கொடுக்க மாட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். 19.10.2022 அன்று நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கு நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் நான் அன்றைய தினமே புகார் கொடுத்துவிட்டேன். காண்பிக்கப்பட்ட புகாரில் தேதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் 19 ம் தேதி சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று தேதி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவின் பேரில் தான் புகார் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் கொடுத்த புகார் மனுவில் 24.10.2022 அன்று போலீசாரிடம் புகார் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் நான் 2, 3 முறை நான் போலீசாரிடம் சென்று புகார் கொடுத்தேன். 2, 3 முறை புகார் கொடுத்ததாக அ.த.சா.ஆ.1 ல் கூறவில்லை என்றால் அ.த.சா.ஆ.1 முதலிலே கொடுக்கப்பட்டது. போலீசார் விசாரணையில் 2, 3 முறை புகார் கொடுத்ததாக கூறவில்லை என்றால் நான் கூறியிருப்பேன் எனக்கு சரியாக ஞாபகமில்லை. வாடகைக்கு இருந்ததாக சொல்லும் வீட்டிலிருந்து காவல் நிலையம் 500 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் சரிதான். குடியிருக்கும் பகுதியில் அதிகபடியான கூச்சல் காவல் நிலையத்தில் கேட்கும் என்றால் காவல் நிலையம் சற்று தொலைவில் தான் உள்ளது. காவல் நிலையத்தை கடந்து தான் பிரதான சாலைக்கு செல்ல வேண்டும் என்றால் 2, 3 வழிகள் உள்ளது. அதில் ஒரு வழி காவல் நிலையத்தை கடந்து பிரதான சாலைக்கு செல்ல வேண்டும். பொருட்களை ஏற்றிக்கொண்டு நான் எங்கே சென்றேன் என்றால் நான் ஏற்கனவே வீடு பார்த்து வைத்திருந்தேன். அந்த வீட்டின் முகவரி தெரியுமா என்றால் நான் வாடகைக்கு குடியிருந்த வீட்டிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிற்கு உள்ளது. நான் வாடகைக்கு வீட்டில் குடியிருந்த போது என்ன வேலை பார்த்தேன் என்றால் நான் Software engineer ஆக பணிபுரிந்து வந்தேன். எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால்

சரிதான். நான் வேலைக்கு சென்றுவிட்டு வந்து பின்னர் பகுதி நேரமாக வேறு வேலை பார்த்தேனா என்றால் நான் வீட்டிலிருந்து வேலை செய்தேன். வீட்டில் உரம் வீட்டில் தயாரித்து செடி வளர்த்தேன் என்றால் உரம் வீட்டில் தயாரிக்கவில்லை செடி வளர்த்தேன். எண்ணெய் வீட்டில் தயார் செய்தேன் என்றால் இல்லை. என் அப்பா, அம்மா பட்டாபிராமில் குடியிருந்தேன். வீடு அவர்களுக்கும் தான் சேர்த்து பார்த்தேன் என்றால் நான் எனக்கு மட்டும் தான் பார்த்தேன். 19.10.2022 –க்கு பத்து மாதங்களுக்கு முன்பே நான் வாடகை கொடுப்பதை நிறுத்தி விட்டேன் என்றால் சரியல்ல. நான் வாடகை கொடுத்துகொண்டு தான் இருந்தேன். நான் வீடு காலி செய்யும் நேரம் இடது பக்கம் வீட்டில் கட்டுமான பணி நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். சுமார் 10 மாத காலம் வாடகை கொடுக்காமல் கட்டுமான பணி நடக்கும் இடத்திலிருந்து 2 பேரை அழைத்து பொருட்களை எடுத்துக்கொண்டு நானாக வீட்டை காலி செய்து விட்டேன் என்றால் சரியல்ல. காலி செய்யும் நேரத்தில் புகைபடமோ, வீடியோவோ நானாக காலி செய்வதுபோல் எடுத்திருந்தால் அது உண்மையில் என்ன நடந்தது என்று தெரிந்துக்கொள்ளலாம் என்றால் அவர்களே வேண்டும் என்று வீடியோ அல்லது போட்டோ எடுத்திருக்கலாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.